DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.25**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | மன்னன் |
| Father Name | : | பாண்டியன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

( 1, 2 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர். 11வது எதிரி இறப்பு. 17 மற்றும் 18 எதிரிகள் ஆஜர் இல்லை. 17 மற்றும் 18 எதிரிகள் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3, 4, 5, 6, 8, 9, 10, 12, 13, 14, 15 மற்றும் 16 எதிரிகள் ஆஜர்.)

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது மதுரை, ஆரப்பாளையம் பகுதியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் போலீஸார் என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் 1987ல் இருந்து திமு கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து கட்சி பணியாற்றி வந்தேன் என்றும், 1997ம் வருடத்தில் ஆவின் பெருந்தலைவராக பொறுப்பில் இருந்தேன் என்றும், 2006ம் வருடத்தில் மதுரை மாநகராட்சி துணை மேயராக பணியாற்றி வந்தேன் என்றும், சுரேஷ்பாபு என்பவர் 2001ல் தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்து வந்தார் என்றும்,

சுரேஷ்பாபு என்பவர் நிலஅபகரிப்பு வழக்கில் பாளையங்கோட்டை ஜெயலில் இருந்த போது ஒருமுறை பார்த்து வந்தேன் என்றும் பிறகு அவர் விடுதலை ஆன பிறகு அவருடன் நேரிலோ, போனிலோ எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை என்றும், அட்டாக் பாண்டியை திருச்சி ஜெயிலில் ஒருமுறை பார்த்து வந்தேன் என்றும், அதன் பின்பு அவரை நேரிலோ, போனிலோ தொடர்பு கொண்டதில்லை என்றும், கடந்த 31.01.2013ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் என் பிள்ளைகளின் பாஸ்போர்ட் ரினிவல் விஷயமாக பாஸ்போர்ட் அலுவலகம் சென்று அன்று 01.00 மணிக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது சம்மந்தமாக அந்த பணியில் இருந்தேன் என்றும், அன்று இரவு சுமார் 08.00 மணியளவில் சுரேஷ்பாபு என்பவர் வெட்டபட்டார் என்ற தகவலை தெரிந்துகொண்டேன் என்றும், பின்பு சுரேஷ்பாபுவின் பாடியை அரசு இராசாசி மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றுவிட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும், இவ்வழக்கில் சரண்டர் ஆனவர்களின் புகைப்படங்களை நான் பார்த்ததில் அவர்களை நான் சந்தித்ததும் இல்லை, அவர்களுடன் தொடரப்பும் இல்லை என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :– இல்லை.</u>**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.16 18:52:02 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.